# INTERNATONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT –II ( 2015-16 )

## TAMIL - CLASS –VI

தமிழ் - ஆறாம் வகுப்பு

**Time :- 3 Hours** | **Maximum Marks :- 90**

நேரம் :- 3 மணி | மதிப்பெண்கள் :- 90

---

## பகுதி- 1

**அ. கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.** 5 x 2 = 10

இஸ்லாமியப் பண்டிகைகளில் தலைசிறந்தது ரம்ஜான் ஆகும். 'ரமதான்' என்ற அரபுச்சொல் இங்கு ரமலானாக மாறி இப்போது ரம்ஜானாகக் கூறப்படுகிறது. இஸ்லாமியர் ஒவ்வொருவரும் தன்னைத்தானே அடக்கியாளும் வல்லமையை இப்பண்டிகை மூலம் பெறுகின்றனர். இஸ்லாமியர்கள் கலிமா , தொழுகை , நோன்பு , ஜகாத் , ஹஜ் எனும் ஐந்து கடமைகளுடன் செயலாற்றி வருகின்றனர். ரம்ஜான் மாதத்தின் ஒவ்வொரு நாளும் சூரிய உதயத்திற்கு முன்பிருந்து சூரியன் மறையும் கால அளவு வரை உணவு , நீர் எதுவும் உட்கொள்ளாது உமிழ்நீர் கூட விழுங்காது நோன்பு நோற்பர். இவ்விழுமிய நோன்பால் ஒவ்வொரு மனிதனும் தன்னைக் கடவுளுக்கு அர்ப்பணிக்கிறான். பிறை கண்ட மறுநாள் அதாவது ஷவ்வால் மாதத்தின் தொடக்க நாள் ரம்ஜானாகிய ஈகைப் பெருநாளாகும். இந்நாளில் ஒவ்வொருவரும் காலையில் எழுந்து குளித்துவிட்டு புத்தாடை அணிவர். தத்தமது வீடுகளில் உள்ள நபர்கள் எத்தனை பேர் இருக்கிறார்களோ அவர்களுக்கு ஒருநாள் ஆகும் உணவுச் செலவினைக் கணக்கிட்டு ஏழைகளுக்கு வழங்குவர். இதற்கு 'ஈத்துல் பித்ர்' என அழைக்கப்படுகிறது. பின்பு பள்ளிவாசல் சென்று தொழுகை நடத்துவர். பல்வேறு உணவு வகைகள் தயாரித்து உண்டு மகிழ்வதோடு உற்றார் உறவினர்களுக்கும் , நண்பர்களுக்கும் கொடுத்து மகிழ்வர். தம் அருகாமையிலுள்ள ஏழைகளுக்கும் பொருளுதவி செய்து மகிழ்வர். ரம்ஜான் திருநாளில் தான் மட்டும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்று இல்லாமல் , இல்லாத ஏழைகள் பலருக்கும் உதவி செய்து மகிழ்ச்சி அடையச் செய்யும் இப்பொன்னாளிற்கு ஈகைப்பெருநாள் என்பதைவிடச் சிறந்த பெயர் உண்டோ ?

**வினாக்கள் :-**

1. இஸ்லாமியரின் ஐந்து கடமைகளாகச் சொல்லப்படுபவை யாவை ?

2. ரம்ஜான் மாதத்தின் ஒவ்வொருநாளும் எவ்வாறு நோன்பு நோற்பர் ?

3. ' ஈத்துல் பித்ர்' என்றால் என்ன ?

4. ரம்ஜான் ஈகைப்பெருநாள் என சிறப்புப்பெயர் பெறக் காரணம் என்ன ?

5. அ. ரமதான் என்பது __________ சொல்லாகும்

(1. கிரேக்கம் 2. இலத்தீன் 3. அரபு ) .

ஆ. ரம்ஜான் பண்டிகைக் கொண்டாடப்படும் மாதம் ______________

(1. ரம்ஜான் 2. ஷவ்வால் 3. முகர்ரம் )

<u>ஆ. பின்வரும் தலைப்பிலுள்ள கட்டுரையை எழுதுக.</u> 1 x 8 = 8

சிறுசேமிப்பு

<u>இ. உன் பிறந்தநாள் விழாவிற்கு தோழன்/தோழியை அழைத்துக் கடிதம் ஒன்று எழுதுக.</u> 1 x 8 =8

## <u>பகுதி -2</u>

<u>இலக்கணம் :-</u> 15 x1 =15

<u>அ. பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

1. முன்னிலை இடம்

(அ. நாங்கள் ஆ. உமது இ. அவன் ஈ. மாணவன்)

2. பலவின்பால்

(அ. அவர்கள் ஆ. நீங்கள் இ. பூனைகள் ஈ. உங்கள்)

3. வருங்காலம்

(அ. நேற்று ஆ. இன்று இ. நாளை ஈ. ஆசிரியர்கள்)

<u>ஆ. தகுந்த விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.</u>

4. வருங்காலம் __________ என்றும் அழைக்கப்படும்.

(அ. நல்ல காலம் ஆ. பொற்காலம் இ. எதிர்காலம் ஈ. முற்காலம் )

5. கருத்து வகை வாக்கியங்கள் _________ வகைப்படும்.

(அ. மூன்று ஆ. நான்கு இ. ஐந்து ஈ. ஆறு )

6.கிழக்கே சூரியன் உதிக்கிறது என்பது ______________ வாக்கியம்

(அ.செய்தி வாக்கியம் ஆ.வினா வாக்கியம் இ.கட்டளை வாக்கியம் ஈ.உணர்ச்சி வாக்கியம்)

**இ.அடைப்புக்குள் கூறியவாறு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

7.என்னே நீலகிரி மலையின் அழகு! (செய்தி வாக்கியமாக்குக)

(அ.நீலகிரி மலை எப்படி இருக்கிறது ? ஆ.நீலகிரி மலை மிகவும் அழகாக உள்ளது

இ.நீலகிரி மலைக்குச் செல்! ஈ. நீலகிரி மலை எங்குள்ளது ?)

8.காவலர் திருடனைப் பிடித்தனர் (செயப்பாட்டு வினையாக்குக)

(அ.திருடன் காவலரால் பிடிபட்டான் ஆ.காவலர் திருடனைப் பிடித்தனரா?

இ.திருடன் காவலரைப்பிடித்தான் ஈ.திருடன் தப்பித்தான் )

9.மறுநாள் வீட்டுப்பாடம் செய்து வருமாறு ஆசிரியர் கூறினார் (நேர் கூற்றாக்குக)

(அ.ஆசிரியர் ," மறுநாள் வீட்டுப்பாடம் செய்து வா " என்றார்

ஆ.ஆசிரியர் ," நாளை வீட்டுப்பாடம் செய்து வா" என்றார்

இ. ஆசிரியர் ," நாளை வீட்டுப்பாடம் செய்ய வேண்டாம்" என்றார்

ஈ. ஆசிரியர்,"இப்போதே வீட்டுப்பாடம் செய்" என்றார்)

**ஈ.தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

10.நீ இன்று பள்ளி சென்றாயா ?

(அ.செய்தி வாக்கியம் ஆ.வினா வாக்கியம் இ.கட்டளை வாக்கியம் ஈ.உணர்ச்சி வாக்கியம்)

11.குருமார்

(அ.ஆண்பால் ஆ.பலர்பால் இ.ஒன்றன் பால் ஈ.பலவின் பால்)

12.நேற்று எங்கள் ஊரில் பெருமழை பெய்தது.

(அ.இறந்த காலம் ஆ.எதிர்காலம் இ.நேர்கூற்று ஈ.அயற்கூற்று)

**உ.சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

13.அ. வெல்லம் என்பது இனிப்புக்கட்டி

ஆ. வெல்லம் என்பது நீர்ப்பெருக்கு

இ. வெல்லம் என்பது உண்ணுதல்

ஈ. வெல்லம் என்பது தானியம்

14.அ. திணை என்பதன் பொருள் நட்பு

ஆ.திணை என்பதன் பொருள் பகை

இ.திணை என்பதன் பொருள் பகுப்பு

ஈ.திணை என்பதன் பொருள் ஒழுக்கம்

15.அ.கண்ணகி – ஆண்பால்

ஆ.கண்ணகி – பெண்பால்

இ.கண்ணகி – பலர்பால்

ஈ.கண்ணகி – ஒன்றன்பால்

## பகுதி -3

**அ. பொருள் கூறுக.** 4 x 1 = 4

1.தெங்கு - 2.இன்னா - 3.அகிலம் - 4.பொலிவு -

**ஆ. எதிர்ச்சொல் எழுதுக.** 4x 1 = 4

1.நிறைய x 2.இன்பம் x 3.பெரியோர் x 4.புகழ் x

**இ. பிரித்து எழுதுக.** 4 x 1 = 4

1.சிற்றூறல் - 2.பனையோலை - 3.கனிஇனியின்றி - 4.தண்கடல்

**ஈ. சேர்த்து எழுதுக.** 3x 1 = 3

1.பெருமை + தலைவர் 2.மூன்று + கனி 3.கனினி + இன்றி

**உ. நிரப்புக.** 3 x 1 = 3

1.ரோபோ இயங்கப் பயன்படும் கணினி மொழி ______________.

2.மாம்பழத்திற்குப் பெயர் பெற்ற நகரம் ________________.

3.வட இந்தியச் செய்தித்தாள்கள் காமராசரைக் ______________ எனப் பாராட்டின.

**ஊ.ஒரு சொல் பல பொருள் எழுதுக :- (ஒன்று மட்டும்)** **1 x 3= 3**

1.ஆறு - ____________ , ____________ , ____________

2.படி - ____________ , ____________ , ____________

## பகுதி -4

**அ.பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத்திட்டத்தைக் கொண்டு வந்தார் காமராசர். பள்ளி மாணவர்களில் ஏழை , பணக்காரன் என்ற வேறுபாடுகளைக் களைய பள்ளிச்சீருடைத் திட்டத்தைக் கொண்டு வந்தார் ; குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார் ; சிற்றூர்தோறும் பள்ளிகள் தொடங்க ஆணையிட்டார் ; நாட்டில் கல்விச் செல்வம் பெருகியது.

"நீரின்று அமையாது ஒழுக்கு"

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"

என்னும் வள்ளுவரின் வாக்கை ஏற்று வேளாண்மைத் தொழில் வளர பல அணைகளைக் காமராசர் உருவாக்கினார்.

**விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 =3**

1.ஏழை , பணக்காரன் வேறுபாடுகளைக் களைய இத்திட்டத்தைக் காமராசர் கொண்டு வந்தார்.

அ.மதிய உணவு ஆ.குலக்கல்வி இ.பள்ளிச்சீருடை

2."நீரின்று அமையாது ஒழுக்கு" என்பது இவரது வாக்கு.

அ.காமராசர் ஆ.திருவள்ளுவர் இ.ஔவையார்

3.இதற்காகப் பல அணைகள் கட்டப்பட்டன.

அ.வேளாண்மைக்காக ஆ.சுற்றுலாவுக்காக இ.நெசவுக்காக

ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3 x 1 =3

1. நறுந்தொகையின் ஆசிரியர் யார் ?

அ. அதிவீரராம பாண்டியன் ஆ. ஔவையார் இ. திருவள்ளுவர்

2. காமராசர் பிறந்த ஊர் ___________

அ. விருதுநகர் ஆ. வீரவநல்லூர் இ. விருகம்பாக்கம்

3. புரவி என்பதன் பொருள் யாது ?

அ. யானை ஆ. குதிரை இ. புலி

இ. எவையேனும் மூன்றனுக்கு குறுகிய விடையளிக்க. 3 x 2 = 6

1. அறிஞர்க்கு அழகு யாது ?

2. எதை 'இழுக்கு' என வள்ளுவர் குறிப்பிடுகிறார் ?

3. முதலமைச்சர் காமராசர் காலத்தில் கட்டப்பட்ட அணைகள் யாவை ?

4. ரோபோவின் மூளை , கண் ,காது மற்றும் வாய் பற்றி எழுதுக.

5. மகளிர் சுயஉதவிக்குழுவினர் எவற்றைக் கொண்டு பொம்மைகள் செய்திருந்தனர் ?

ஈ. எவையேனும் இரண்டனுக்கு விரிவான விடையளிக்க. 2 x 4 = 8

1. காமராசர் எவ்வாறெல்லாம் பாராட்டப்படுகிறார் ?

2. நமக்கு நன்மை தருவனவாக ஔவையார் கூறுவன யாவை ?

3. புரவி எடுப்பு (விழா) என்றால் என்ன ?

உ. அடிபிறழாமல் எழுதுக. 2+2+4=8

1.' குணம்' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

2.' சால்பு' என முடியும் குறளை எழுதுக.

3.' மடல்பெரிது' எனத் தொடங்கும் முதுரைப் பாடலை எழுதுக.

அல்லது

உனக்குத் தெரிந்த ஏதேனும் நான்கு நறுந்தொகைப் பாடலை எழுதுக.